# மணிமேகலை காட்டும் சமுதாயம்

முனைவர். ஞா.பிரான்சிஸ்கேதரின்
தமிழ்த்துறைத் தலைவர், ஜெ.அ. மகளிர் கல்லூரி, பெரியகுளம். தமிழ்நாடு, இந்தியா.

காப்பியங்கள் பண்டைத்தமிழரின் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. மணிமேகலையில் அக்காலச் சமுதாயத்தை முழுமையாகக் காணமுடிகிறது. மணிமேகலை பசி ஒழிப்பு சாதி ஒழிப்பு, மதுஒழிப்பு, சிறையொழிப்பு, பரத்தைஒழிப்பு போன்ற சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியமாகத் திகழ்கிறது. மற்றும் பசியின் கொடுமையை ஒழிப்பதையே சிறந்த அறமாகக் கொண்டுள்ளது. மணிமேகலை சமூகத் தொண்டு பற்றி ஆழமாகக் குறிப்பிடும் காப்பியம். இது தமிழ்ப் பண்போடு தோன்றக் கூடிய காப்பியம். இக் காப்பியம். வாழ்க்கை நிலையற்றது என்று சுட்டிக் காட்டி மக்களை நல்வழிப்படுத்துவதாகத் திகழ்கிறது. "மணிமேகலைக் காப்பியம் பௌத்தசமயக் காப்பியமாக விளங்கினாலும் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட பண்டைத் தமிழகத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது"[1] என்கிறார் முத்துராசன்.

**பசி ஒழிப்பு:**

அறங்களில் சிறந்தது பசித்த மக்களுக்கு உணவளிப்பதேயாகும். அந்த சிறந்த அறத்தை ஆபுத்திரன் செய்கிறான். ஆபுத்திரன் மதுரைக்குச் சென்று பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவனாகக் குற்றமற்ற சிறப்பினையுடைய வீடுகள் தோறும் சுற்றி வந்து கிடைத்த உணவைக் காணார், கேளார் கால்முடப்பட்டோர் முதலிய பலருக்கும் கொடுத்து விட்டு எஞ்சிய உணவைத் தான் உண்டுவிட்டு சிந்தாதேவி கோயிலில் தங்கியிருக்கிறான்.

"ஐயக் கடிஞை கையில் ஏந்தி
மையறு சிறப்பின் மனைதொறு மறுகிக்
காணார் கேளார் கால்முடப்பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருக என்று இசைத்துடன் ஊட்டி
உண்டொழி மிச்சிலுண் டோடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன்"

(ஆ.தி.அ.கா., 109 – 115 வரிகள்.)

போன்று ஆபுத்திரன் உணவூட்டக் கூடிய செயலைச் செய்கிறான். ஆபுத்திரன் கையில் ஓடேந்தி பிச்சையெடுத்து வாழ்கின்ற நிலையிலும் பகுத்துண்ணும் பண்பினை மறவாது தான் பிச்சையெடுத்துக் கொண்டு வந்த உணவினைப் பிச்சையெடுப்பதற்கும் வாய்ப்பில்லாத குருடர், செவிடர், முடவர், பிணிபட்டு உழல்வோர், முதியோர் முதலானவர்களை அழைத்து அவர்தம் பசியினை ஆற்றுவித்து அதன் பின்பே தன் பசியினை ஆற்றுவித்துக் கொண்டான்.

"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் 322.)

என்ற குறளுக்கேற்ப தான் உண்பதைப் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் பாதுகாத்தல் அறநூலார் தொகுத்துக் கூறிய அறங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த அறமாகும் என்கிறார் வள்ளுவர். இவ்வாறு ஒரு சிறந்த அறத்தை ஆபுத்திரன் செய்கிறான். ஆபுத்திரன் பிறர் நலம் பேணும் பண்புடையவனாகத் திகழ்கிறான். பிறப்பால் வேற்றுமையில்லை. ஒழுக்கமே சிறந்தது என்ற உண்மை ஆபுத்திரன் கதையிலிருந்து வெளிப்படுகிறது. எந்த உயிர்களுக்கும் தீங்கு நினைக்கக் கூடாது. உயிர்க் கொலை புரிதல் தவறு என்று உயிரின் மகத்துவம் பற்றி ஆபுத்திரன் எடுத்துக் கூறுகிறான். இதை பசுவின் உயிரைக் காப்பாற்றுவதன் மூலம் அறிய முடிகிறது. பிற உயிர்கள் துன்பப்படும்போது அதைத் தன் துன்பமாகக் கருதி வருந்துவதும் உதவி செய்வதும் மனித மாண்புகளின் வெளிப்பாடாகும்.

ஆபுத்திரனுக்கு அமுதசுரபி என்ற பாத்திரத்தைச் சிந்தாதேவி கொடுத்து பசிப்பிணியை நீக்க உதவி செய்கிறாள். ஆபுத்திரன் பசியால் வருந்துபவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு உதவுகிறான். ஆபுத்திரனுக்குப் பல இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் தன் கொள்கையிலிருந்து மாறாமல் பசிப்பிணி நீக்குவதையே அறமாகக் கொண்டு செயல்பட்டான். ஆபுத்திரன் நற்காரியங்கள் செய்ததினால் பல்வேறு நல்ல பிறப்புகளை அடைகிறான்.

**பசியின் கொடுமை:**

விசுவாமித்திரர் கதை பசிப்பிணியின் கொடுமையைக் கூறுவதாக அமைகிறது. மணிமேகலைக்குத் தீவதிலகை விசுவாமித்திரர் பற்றிக் கூறுகிறாள். முன்பு ஒரு காலத்தில் புல்லும், மரங்களும் வெம்மையினாலே கருகிப் போகும் அளவிற்கு மழை வளம் இல்லாமையால் உயிர்கள் அனைத்தும் பசியினால் மடிந்தன. இதனால் அரசாட்சியைத் துறந்து, அரிய மறையோதும் அந்தணனாகிய விசுவாமித்திரர் இப்பெரிய உலகில் எல்லா இடங்களிலும் சுற்றித் திரிந்தார். அவருடைய பசியைப் போக்க உணவு ஒன்றும் கிடைக்காததால் நாயின் ஊனையும் உண்ணத் தொடங்கினார். உணவு உண்பதற்கு முன் செய்ய வேண்டிய தேவ பலியீடுகளைச் செய்தார். இதனை,

"அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாயின் தின்னுதல் உறுவோன்
இந்திரச் சிறப்புச் செய்வோன்"

(பா.பெ.கா. 86 – 88 வரிகள்)

என்று மணிமேகலை கூறுகிறது.

இதனால் மகிழ்ந்த வானவர் கோமானாகிய இந்திரன் தோன்றி மழை வளத்தினைத் தந்து



Scanned by CamScanner

உதவினான். விசுவாமித்திரர் தனக்கு ஏற்பட்ட பசியிலும் முதலில் இந்திரனுக்குச் சிறிது உணவு எடுத்து பலியீடு செய்யும் நற்குணம் உடையவராகத் திகழ்கிறார். விசுவாமித்திரர் முதற்கண் தேவ பலியினைச் செய்ததால், இந்திரன் தோன்றி மழை வளத்தினைத் தந்து உதவினான். ஆதனால் மன்னுயிர்கள் மீண்டும் பெருகின. பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பதே சிறந்த அறம் என்று பண்டைய நூல்கள் வலியுறுத்துகின்றன. புறநானூற்றில் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற வரியைக் காணலாம். இதனை மணிமேகலையில்

"ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
(பா.பெ.கா., 93 – 96 வரிகள்)

என்ற வரிகள் எடுத்துணர்த்துகின்றன. தீவதிலகை.

"குடிப்பிறப் பழிக்கும், விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும், மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி" (பா.பெ.கா.,76-80 வரிகள்)

என்று பசிப்பிணியின் கொடுமைகளைக் கூறுகிறாள். பசிப்பிணி ஒருவரின் குடிப்பிறப்பினால் வந்த தகுதியை அழித்துவிடும். தூய்மையான இயல்புகளைச் சிதைத்துவிடும். வாழ்வுக்குப் பற்றுக் கோடான கல்வியையும் போக்கிவிடும். நாணமாகிய அணியினையும் நீக்கிவிடும். அழகினைச் சிதைத்துவிடும் என்று பசிப்பிணியின் கொடுமையினைத் தீவதிலகை கூறுகிறாள். "மனித குலத்தின் தீர்க்க முடியாதசிக்கல்களுள் பசியும் சாவும் மிக இன்றியமையாதவை. இவை இரண்டையும் எதிர்கொள்ள மனித சமூகம் தொடர்ந்து போராடி வருகிறது"[2] என்று நா. ஸ்டீபன் கூறுகிறார்.

**சாதி ஒழிப்பு:**

ஆபுத்திரன் ஒழுக்கக் கேடுற்றத் தாய்க்குப் பிறந்தாலும் உயர் பண்புடையவனாகத் திகழ்கிறான். எக்குடியில் பிறந்தாலும் ஒழுக்கமுடையோர் உயர்வடைவர் என்பதற்கு ஆபுத்திரன் ஓர் உதாரணமாகத் திகழ்கிறான். பிறப்பினால் வேற்றுமையில்லை என்பதற்கு ஆபுத்திரன் கதை ஒரு எடுத்துக்காட்டாய் அமைகிறது. "மக்களுள் பிறப்பினால் வேற்றுமை இல்லையென்பது புத்த மதத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. இக்கொள்கையைப் புத்த மதமும் புத்த நூல்களும் வலியுறுத்தும் அளவுக்கு வேறு எந்த மதமும் எந்த நூல்களும் வலியுறுத்தவில்லை"3 என்கிறார் சாமி. சிதம்பரனார். ஆபுத்திரன் கதை வாயிலாக பிறப்பால் வேற்றுமையில்லை என்பதை அறிய முடிகிறது. அந்தணர்கள் ஆபுத்திரனை ஆ மகன் என்று இழிவாய்ப் பேசும் போது ஆபுத்திரன் அவர்களைப் பார்த்து, அசலன் பசுவின் மகன், சிருங்கி மானின் மகன், விரிஞ்சி புலியின் மகன், கேசகம்பளன் நரியின் மகன். இவர்கள் உமது குலத்து முதல்வர்களான முனிவர் கூட்டங்கள். இவர்களைப் புகழ்கிறீர்கள். உங்களின் நூல்களிலே பசுவினோடு வந்த இழிகுலம் யாதும் உள்ளதோ? என்று கூறுகிறான். மற்றும் ஆபுத்திரனுடைய பிறப்பு இழிவானது என்று கூறிய அந்தணனுக்கு ஆபுத்திரன்,

"மாமறை மாக்கள் வரும் குலம் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுள் கணிகை காதல் அம் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்
புரிநூல் மார்பீர் பொய்யுரை ஆமோ?
சாலிக்கு உண்டோ தவறு"
(ஆ.தி.அ.கா93-98 வரிகள்)

என்று ஆபுத்திரன் அந்தணர்களுக்கு அறிவுரை கூறுகிறான். மேற்கூறியவற்றிலிருந்து பிறப்பால் வேற்றுமை இல்லை. ஒழுக்கம் தான் சிறந்தது என்பதை அறியமுடிகிறது. வள்ளுவரும் பிறப்பால் வேற்றுமையில்லை என்பதை,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள். 972.)

என்று பிறப்பால் அனைவரும் சமம் என்ற உயரிய கருத்தைக் கூறுகிறார்.ஆபுத்திரனின் பிறப்பு அன்றைய அந்தணர்களின் சமுதாயத்தினைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**மது ஒழிப்பு**

காவிரிப்பூம்பட்டினத்தில் சாதுவன் என்னும் ஒரு வணிகன் இருந்தான். இவன் ஆதிரையின் கணவன். பொருள் தேடுவதற்காக வேற்று நாடு செல்கின்றான். அவ்வாறு செல்லும் போது, அவன் சென்ற மரக்கலம் புயலில் சிக்குண்டு கவிழ்ந்தது. சாதுவன் கடலில் நீந்திச் சென்று தப்பிப் பிழைத்து கடற்கரைப் பக்கமாக ஒரு மரத்து நிழலிலே கரை சேர்ந்தான். அவ்வழியாக வந்த நாகநாட்டு மக்கள் தங்களுக்கு நல்ல உணவு கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சியுற்றனர். மக்கள் அவனைத் தூக்கிக் கொண்டு நாகர் தலைவனிடம் செல்கின்றனர். சாதுவன் விழித்து தன்னைச் சுற்றி வேற்றுருக் கொண்ட மக்கள் நிற்பதைக் கண்டு அச்சமுற்றான். அந்நாட்டு அரசன் குறுமகன் அவர்கள் மொழியில் சாதுவனிடம் யாரென்று கேட்டான். அவன் பேசிய மொழி சாதுவனுக்குத் தெரிந்திருந்தது. அதனால் அவர்கள் மொழியில் தான் வந்த நிலையை அவர்களுக்கு எடுத்துக் கூறினான். அதைக் கேட்ட நாகர் தலைவன் மனமிரங்கி அவனது பசியைப் போக்கும் பொருட்டு இளைய ஒரு பெண்ணையும், கள்ளும், புலாலும் கொடுப்பீர்களாக என்று நாகர்களிடம் கூறுகிறான். இதையே,

"நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களும் ஊனும் வேண்டுவ கொடு"(ஆ.பி.கா.
77 – 76 வரிகள்)



Scanned by CamScanner

என்று நாகர் தலைவன் கூறுகிறான். அதனைக் கேட்ட சாதுவன் கொடிய சொற்களைக் கேட்டேன் அவை எனக்கு வேண்டாம் என்று கூறுகிறான். அதைக் கேட்ட நாகர் தலைவன், இவ்வுலகில் வாழும் மக்களுக்கெல்லாம், ஊன், கள் இவைகளைப் போல் இன்பம் தரும் உணவும் வேறு உண்டா? அவ்வாறு உண்டெனில் எங்களுக்கும் காட்டுவாயாக! என்கிறான். அதற்குச் சாதுவன்,

"மயக்கும் கள்ளும் மன் உயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்!
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்லறம் செய்வோர் நல் உலகு அடைதலும்
அல்லறம் செய்வோர் அருநரகடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர்"
(ஆ.பி.கா.,84 – 90 வரிகள்.)

என்று கூறுகிறான். இவ்வாறு நாகர் தலைவனுக்கு மயக்கும் கள்ளும் உயிர்களைக் கொல்லுதலும் தீயது என்று சான்றோர்கள் ஒதுக்கினார்கள் என்று சாதுவன் வலியுறுத்துகிறான். கள் அருந்துவோர் தனக்குள்ள புகழையெல்லாம் தானே அழித்துக் கொள்வதற்குச் சமமாவர். எந்த உயிரையும் கொல்லாமலும், புலால் உண்ணாமலும் வாழ்ந்தால் எல்லா உயிரும் கைகூப்பி வணங்கும் என்கிறார் வள்ளுவர்.

**சிறை ஒழிப்பு**

**சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்குதல்:-**

மணிமேகலை காயசண்டிகை உருவில் வந்து பசிதீர்த்தல் என்ற சிறந்த அறத்தைச் செய்கிறாள். மணிமேகலை அமுதசுரபியைக் கையிலே எடுத்துக் கொண்டு, சோழமன்னன் திருவடி பணியாது பிழைத்தோரை ஒறுக்கும் வண்ணம் அடைத்து வைத்துள்ள சிறைக்கோட்டம் புகுந்து அங்கு வயிறார உணவு பெறாது வருந்தியிருப்பவர்களுக்கு அமுதசுரபியினின்றும் அன்னம் வழங்கி அவர்களை மகிழ்ச்சியுறச் செய்கிறாள். மணிமேகலை சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுகிறாள். மேலும் அவள் சிறையிலிருப்பவர்க்கெல்லாம் நன்முறையில் தொண்டு புரிகின்றாள். இதனை

"சிறையோர் கோட்டம் சீத்துஅருள் நெஞ்சத்து
அறவோர்க் காக்கும் அதுவாழி யரென
அருஞ்சிறை விட்டாங்கு ஆயிழை உரைத்த
பெருந்தவர் தம்மாற் பெரும்பொருள் எய்தக்
கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க்காக்கினன்அரசாள்வேந்தென்."
(சி.அ.ஆ.கா., 57–162வரிகள்.)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

மணிமேகலையின் சொற்கேட்டு சிறையிலுள்ளாரை விடுவித்து விட்டு கறைபட்ட மாக்கள் இல்லாது அறவோர் வாழும் இடமாக அவ்விடம் அமையுமாறு அரசாளும் வேந்தனும் செய்தருளினர். சிறைச் சாலையை மாற்றி சீர்திருத்தச் சாலையாக அரசன் மாற்றியதை மணிமேகலை நூல்வழி அறிய முடிகிறது.

உயிர்களுக்கெல்லாம் உணவளிப்பதே அறங்களிலேயே சிறந்த அறமாகும். உலகிலுள்ள உயிர்கள் பட்டினியால் மடியாமல் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு மணிமேகலை பசித்த உயிர்களுக்கெல்லாம் உணவளிக்கிறாள். வெளியில் உள்ள மக்களுக்கு மட்டுமில்லாமல் சிறையில் இருக்கும் மக்களுக்கும் வயிறார உணவளிக்கிறாள். மணிமேகலையை "உலக வரலாற்றில் சிறையில் வாடுபவருக்குப் பெண் தொண்டு செய்ய முற்படும் முதல் முயற்சி இதுவே"[4] என்று வீ.லீலாவதி குறிப்பிடுகிறார்.

இன்றைய காலக் கட்டத்தில் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கிய நவீன மணிமேகலை என்று கிரண்பேடி ஐ.பி.எஸ் புகழப்படுகிறார். " டில்லி திகார் சிறைச்சாலையை ஒரு தவச்சாலையாக மாற்றியமைத்த அற்புதம் உலக வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்த அதிசயம்"[5] என்கிறார். புவியரசு. அதனால் இரண்டாவது மணிமேகலை என்று குறிப்பிடுகிறார்

மனிதன் உயிர்வாழ அடிப்படையான தேவைகள் உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு ஆகியவையாகும். இதையே மணிமேகலை எடுத்தியம்புகிறது. சமுதாயத்தின் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் வழங்குவது உணவு, அதன்பின் உடைகள் கொடுத்தல். பிறகு வீடு கட்டிக் கொடுத்தல் போன்றவற்றை அரசாங்கம் செய்து கொடுக்கிறது. அதனால் எல்லாக் காலத்திற்கும் பொருந்துமாறு உள்ள கருத்துக்களை மணிமேகலைக் காப்பியம் எடுத்தியம்புகிறது. உலக வாழ்க்கை நிலையில்லாதது. அறம் மட்டுமே அழியாதது என்ற உண்மையை எடுத்துக் கூறுகிறது. இக்காப்பியம் மக்கட் சமுதாயத்தை தீய வழியிலிருந்து நீக்கி நல்வழிப்படுத்த வந்த ஒரு சீர்திருத்தக் காப்பியம் என்பதை அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

1.கு.முத்துராசன், 'காப்பியக் கருத்தோட்டங்கள்', ப.131.

2. ஞா. ஸ்டீபன், 'மணிமேகலையில் அமுதசுரபி என்னும் தொன்மம்', ப.7.

3. சாமி. சிதம்பரனார், 'மணிமேகலை காட்டும் மனித வாழ்வு', ப.136.

4. லீலாவதி, 'மணிமேகலை காட்டும் அஹிம்சை'ப.39.

5. புவியரசு, 'நான்துணிந்தவள் கிரண்பேடிவரலாறு'ப.6.

6. நா.செல்வராசு, 'வள்ளுவப் பெண்ணியம்', ப.65.



Scanned by CamScanner